*Sri Lankan Journal of Arabic and Islamic Studies, 4(2) 2021*
*Published by Faculty of Islamic Studies and Arabic Language, ISSN: 2550:3014*
*Received:15th October 2020/Accepted: 16th November 2021*

# இலங்கை முஸ்லிம்களின் கட்சி அரசியல்: ஒரு தமிழ்-பேசும் சமுதாயத்தின் தனித்துவ அரசியல் குறித்த பகுப்பாய்வு

# (Party Politics of Sri Lankan Muslims: An Analysis of Distinctive Politics of a Tamil-speaking Community)

Athambawa Sarjoon,
Department of Political Science, University of Peradeniya,
Peradeniya 20400.
Correspondence: sarjoona@gmail.com / sarjoona@pdn.ac.lk

## Abstract

*The history of party politics of Sri Lankan Muslims is relatively a short. However, the Sri Lanka Muslim Congress, the first distinct Muslim political party gained popularity in electoral political and became King-maker or Queen-maker at national level in a short span of time. The leadership of M.H.M.Ashraff played an important role in the growth and influence of this distinct Muslim political party. This study has examined the growth of the distinct party politics of Sri Lankan Muslims, its changing dynamics particularly after the demise of its founder-leader, M.H.M.Ashraff. Reviewing the secondary data and changing political context, this study has found that although Sri Lankan Muslims avoided forming distinct Muslim political parties and politically aligned with ethnic majorities, the intense of violent ethnic conflict and civil war, and the abandoning of Muslims' interests by both Sinhalese and Tamil political leaders compelled the Muslims to conceptualize about a distinct Muslim political party and to form it. These factors also led the distinct Muslim party become influential in national politics. The study has also found that the Muslim party politics in post-Ashraff era has found transformations due to leadership crisis, dominance of regionalism, parting of popular founder-members, and the formation of more new Muslim political parties. These transformations, together with the changing socio-political context in the post-civil war era question the strength of Muslim party politics and challenge the proper inclusion of Muslims' interests and demands in regional and national politics. As to strengthen the Muslim party politics, this study emphasizes the importance of unity of Muslim political leaders and the voters while reforming the missions and the activities of Muslim political parties focusing on contemporary socio-political context and national interests.*

***Key-words:*** *Sri Lankan Muslims, party politics, Sri Lanka Muslim Congress, M.H.M.Ashraff,*

### ஆய்வுச் சுருக்கம்

இலங்கை முஸ்லிம்களின் கட்சி அரசியல் செயற்பாடானது ஒப்பீட்டளவில் மிகக் குறுகிய வரலாற்றைக் கொண்டது. ஆனாலும், முதலாவது தனித்துவமான முஸ்லிம் கட்சியான ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் அது ஆரம்பிக்கப்பட்ட மிகக் குறுகிய காலத்தினுள் தேர்தல் அரசியலில் செல்வாக்குச் செலுத்தத் தொடங்கியதுடன் தேசிய அரசியலைத் தீர்மானிக்கும் சக்தியாகவும் எழுச்சி பெறலானது. இத்தனிக் கட்சி அரசியலில் வளர்ச்சியிலும் எழுச்சியிலும் முக்கிய பாத்திரத்தை எம்.எச்.எம்.அஷ்ர.ஃப் எனும் தலைமைத்துவம் வகித்திருந்தது. இந்த ஆய்வானது இலங்கை முஸ்லிம்களின் தனிக் கட்சி அரசியலில் எழுச்சியையும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் நிறுவகத் தலைவரின் மறைவை அடுத்து முஸ்லிம் தனித்துவக் கட்சி அரசியல் மாறிச்

சென்றுள்ள புதிய போக்குகள் பற்றியும் பகுப்பாய்வுக்குட்படுத்தியுள்ளது. தங்களுக்காக தனியான அரசியல் கட்சியினூடாக அரசியலை முன்னெடுத்துச் செல்வதை தவிர்த்து பெரும்பான்மை இனத்தவர்களுடன் இணைந்த வகையிலேயே காலாதிகாலமாக முஸ்லிம்கள் அரசியலில் ஈடுபட்டிருந்த போதிலும் வன்முறைசார் இன முரண்பாட்டினதும் உள்நாட்டுப் போரினதும் தாக்கங்களும் சிங்கள மற்றும் தமிழ் அரசியல் தலைமைத்துவங்களால் முஸ்லிம்கள் கைவிடப்பட்டமையும் தனியான முஸ்லிம் அரசியல் கட்சி எனும் விடயத்தை எண்ணக்கருவாக்கி அதனை உருவாக்க வழிவிட்ட பிரதான காரணிகள் என்பதை இவ்வாய்வு அடையாளம் கண்டுள்ளது. இக்காரணிகளே தனித்துவ முஸ்லிம் கட்சி தேசிய அளவில் செல்வாக்குச் செலுத்தும் சக்தியாக எழுச்சிபெறவும் வழிவிட்டன. எனினும் அஷ்ர.்.பின் மறைவுக்குப் பின்னரான முஸ்லிம்களின் கட்சி அரசியல் என்பது தலைமைத்துவ நெருக்கடி, பிராந்தியவாத மேலாதிக்கம், முக்கிய நிறுவக-உறுப்பினர்களின் வெளியேற்றம் மற்றும் புதிய முஸ்லிம் கட்சிகளின் உதயம் என பல்வேறு மாற்றங்களைக் கண்டுள்ளது. இம்மாற்றங்களுடன் உள்ளூர் யுத்தத்தின் முடிவின் பின்னரான சமூக-அரசியல் சூழ்நிலையும் சேர்ந்து முஸ்லிம் கட்சி அரசியலில் பலத்தினை கேள்விக்குட்படுத்துவதுடன் தேசிய மற்றும் பிராந்திய அரசியலில் முஸ்லிம்களின் நலன்கள் மற்றும் கோரிக்கைகளை முறையாக முன்னிலைப்படுத்துவதையும் சவால்மிக்கதாக்கியுள்ளது என்பதையும் இவ்வாய்வு அடையாளம் கண்டுள்ளது. ஆதலால், முஸ்லிம்களின் கட்சி அரசியலைப் பலப்படுத்துவதற்கு முஸ்லிம் கட்சித் தலைவர்களும் முஸ்லிம் வாக்காளர்களும் ஒன்றுபடுவதையும் சமகால சமூக மற்றும் அரசியல் சூழ்நிலைகளுக்கு ஏற்றவகையிலும் தேசிய நலன்களைக் கருத்திற் கொண்டும் முஸ்லிம் கட்சிகளின் தூர நோக்குகளும் செயற்திட்டங்களும் மீளாய்வு செய்யப்படுவதையும் இவ்வாய்வு வலியுறுத்துகின்றது.

**திறவுச்-சொற்கள்:** இலங்கை முஸ்லிம்கள், கட்சி அரசியல், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், எம்.எச்.எம்.அஷ்ர.்.ப்.

## 1. அறிமுகம்

இலங்கையில் தமிழைத் தாய் மொழியாகப் பேசுகின்ற சிறுபான்மையினரான முஸ்லிம்களின் பிரதிநிதித்துவ அரசியல் வரலாறு சுமார் 130 வருடங்களுக்கு மேல் பழமையானது என்றாலும் தனித்துவம் வாய்ந்த கட்சி அரசியல் செயற்பாட்டில் சுமார் 35 வருடங்களாகத்தான் முஸ்லிம்கள் ஈடுபட்டு வந்துள்ளார்கள். அந்தவகையில், 1986 இல் தோற்றம் பெற்ற ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் (Sri Lanka Muslim Congress) எனும் அரசியல் கட்சியானது இலங்கை முஸ்லிம்களின் அரசியல் செயற்பாட்டில் ஒரு மைல்க் கல்லாகும். ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தோற்றமும் அதன் அரசியல் செயற்பாடுகளும் அதுவரை பெரும்பான்மையினர்களான சிங்கள மற்றும் தமிழ் மக்களுடன் இணைந்து அரசியலில் ஈடுபட்டு வந்திருந்த முஸ்லிம்களின் அரசியலுக்கு தன்னித்துவ அடையாளத்தையும் பலத்தையும் பெற்றுக்கொடுத்தது. இதனால், முஸ்லிம்களின் அரசியலில் பல்வேறு மாற்றங்களும் அபிவிருத்தியும் ஏற்பட்டது மட்டுமன்றி முஸ்லிம்களிடையே பல்துறைசார் அபிவிருத்தியும் ஏற்படலானது.

எனினும், இலங்கை முஸ்லிம்களின் தனித்துவக் கட்சி அரசியலின் தந்தையென அடையாளப்படுத்தப்படுகின்ற ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிறுவகத் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ர.்.பின் மறைவை அடுத்து (16.09.2000 இல்) அக்கட்சிக்குள் ஏற்பட்ட மாற்றங்களாலும் தேசிய அளவில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களாலும் முஸ்லிம் தனிக் கட்சி அரசியலும் பல்வேறு சவால்களை எதிர்நோக்கலானது. அதுவரை ஒரு கட்டுக்கோப்பான தலைமைத்துவ வழிகாட்டுதல்களின் கீழ் இயக்கிக் கொண்டுசெல்லப்பட்ட முஸ்லிம் தனிக் கட்சி அரசியலில் பிரதேசவாதத்தை முன்னிலைப்படுத்திய தலைமைத்துவப் போட்டி அதிகரித்து தனித்துவ முஸ்லிம் கட்சி உடைவுக்குட்பட்டதுடன் பல புதிய முஸ்லிம் அரசியல் கட்சிகள்

உதயமாக அது வழிவிட்டது. ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் உடைவு முஸ்லிம் கட்சி அரசியலின் பேரம்பேசும் பலத்தினை படிப்படியாக கேள்விக்குட்படுத்தியதுடன் முஸ்லிம் தனித்துவ அரசியலையும் சீர்குலைவுக்குட்படுத்தியது.

இந்தக் ஆய்வுக் கட்டுரையானது, இலங்கை முஸ்லிம்களிடையே எழுச்சி பெற்ற தனிக் கட்சி அரசியலின் செல்வாக்கு, அஷ்ர.்.புக்குப் பின்னரான முஸ்லிம் தனிக் கட்சி அரசியலில் போக்குகளுடன் முஸ்லிம் தனிக் கட்சி அரசியல் எதிர்நோக்கி நிற்கும் சவால்களையும் பகுப்பாய்வு செய்துள்ளது. இலங்கை முஸ்லிம்கள் பொரும்பான்மை இனத்தவர்களுடன் இணைந்து தேசியக் கட்சிகளினூடாக இன்றுவரை அரசியலில் ஈடுபட்டு வருகின்ற போதிலும் தலைமைத்துவ மற்றும் பிரதிநித்துவச் செல்வாக்கை கருத்திற் கொண்டு முஸ்லிம் தனித்துவத்தை முன்னிலைப்படுத்துகின்ற கட்சிகளின் அரசியலையே இக்கட்டுரை பிரதான நோக்காகக் கொண்டு அவற்றின் செல்வாக்கும் போக்கும் மட்டுமே இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளன. அவ்வாறே, தமிழ்-பேசும் சமுதயாத்தினர்களாக இலங்கைத் தமிழர்கள் மற்றும் மலையகத் தமிழர்களுடன் தமிழ்பேசும் முஸ்லிம்களும் இணைந்து அரசியலில் ஈடுபடுகின்ற போதிலும் இந்த ஆய்வானது முஸ்லிம்களின் உரிமைக்காகவும் அவர்களை முதன்மைப்படுத்தியும் அரசியலை முன்னெடுக்கின்ற முஸ்லிம் அரசியல் கட்சிகளின் போக்கு பற்றி மட்டுமே ஆராய்கின்றது என்பது இவ்வாய்வின் வரையறையாக உள்ளது.

## 2. ஆய்வு முறையியல்

ஒரு சமுதாயத்தின் அரசியல் கட்சி வரலாற்றை ஆராய்கின்ற வரலாற்று ஆய்வான இவ்வாய்வுக்கான தகவல்களும் தரவுகளும் முழுவதும் இரண்டாம் நிலை மூலங்களிலிருந்தே பெறப்பட்டுள்ளன. குறிப்பாக முஸ்லிம்களின் மரபு ரீதியான அரசியற் செயற்பாடுகள், மரபு ரீதியான அரசியல் சார்புநிலை மற்றும் புதிய முஸ்லிம் கட்சியின் தோற்றம், அது முஸ்லிம்களின் அரசியல் செயற்பாட்டின் போக்கிலும் கலாசாரத்திலும் ஏற்படுத்திய தாக்கங்கள் மற்றும் முதலாவது செல்வாக்குமிக்க முஸ்லிம் தனிக் கட்சியான ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தாபகரான அஷ்ர.்.பின் மறைவை அடுத்து முஸ்லிம் கட்சி அரசியலில் ஏற்பட்டுள்ள திருப்பங்கள் போன்றவை தொடர்பபட்ட தகவல்கள் ஆய்வுக் கட்டுரைகள், புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்டு அவை ஆழமாகவும் விமர்சன நோக்கிலும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளதோடு அத்தகவல்கள் இவ்வாய்வின் நோக்கங்களுக்கு ஏற்ப இக்கட்டுரையில் பல்வேறு பகுதிகளில் நேரடிக் கருத்துக்களாகவும், சாராம்சங்களாகவும், ஆய்வாளரின் வியாக்கியானங்களின் பகுப்பாய்வாகவும் முன்வைக்கப்பட்டுள்ளன.

## 1. இலங்கை முஸ்லிம்களும் மரபு ரீதியான அரசியல் செயற்பாடுகளும்

இலங்கைக்கும் அரேபியர்களுக்கும் இடையேயான தொடர்பு சுமார் 2500 வருடங்களுக்கும் மேல் பழைமை வாய்ந்தது. அவ்வாறே, இலங்கையுடனான இஸ்லாத்தின் தொடர்பும் சுமார் 1400 வருடங்கள் பழைமை வாய்ந்தது என்பதும் வரலாற்று உண்மை. அரேபிய வர்த்தகர்களின் தொடர்பு இலங்கையில் முஸ்லிம்களின் குடியேற்றத்துக்குக் காரணமாக அமைந்தது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. கி.பி 7 ஆம் நூற்றாண்டில் சிறு அளவிலான வர்த்தக நோக்கிலான அரேபிய குடியேற்றங்கள் இலங்கையின் முக்கிய துறைமுக மற்றும் கரையோர நகரங்களில் இருந்துள்ளன. அவ்வாறே, அரேபிய வர்த்தகர்கள் சுதேசியப் பெண்களை மணமுடித்து கரையோர நகரங்களில் வாழ்ந்ததன் ஊடாகவும் முஸ்லிம் சமுதாயம் இலங்கையில் உருவாகியுள்ளது (சர்ஜுன், 2017; McGilvray & Raheem, 2007). தவிர, வர்த்தக நோக்கிலும் சமய நோக்கிலும் தென்னிந்தியாவின் கேரளா மற்றும் தமிழ்நாடு ஆகிய பிராந்தியங்களிலிருந்து வந்த

முஸ்லிம்களாலும் இலங்கையில் முஸ்லிம் சமுதாயம் வளர்ந்துள்ளது (McGilvray & Raheem, 2007). இம்முஸ்லிம்கள் படிப்படியாக இலங்கையில் நிரந்தரக் குடிகளாகியதுடன் தமது நேர்மையான நடத்தைகள் மற்றும் வர்த்தகச் செயற்பாடுகள் ஊடாக சுதேசிய ஆட்சியாளர்களோடும் மக்களோடும் நட்புடன் சகவாழ்வு வாழ்ந்து வந்துள்ளனர் (சர்ஜூன், 2019). இலங்கை முஸ்லிம்களில் அரேபிய வழித்தோன்றல்களுடன் 18 ஆம் மற்றும் 19 ஆம் நூற்றாண்டுகளில் முறையே டச்சுக்காரர்களாலும் பிரித்தானியர்களாலும் தொழில் நிமித்தம் (பாதுகாப்புச் சேவைக்காக) கொண்டுவரப்பட்ட மலாயர்களும் பிரித்தானியர்களால் பெருந்தோட்டங்களுக்கு கூலித் தொழிலாளர்களாக தென்னிந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட இந்தியர்களிலிருந்த முஸ்லிம்களும் பின்னரான காலங்களில் இலங்கை முஸ்லிம் சமுதாயத்தினுள் இணைந்து கொள்ளலாயினர். எனினும், இலங்கை முஸ்லிம்கள் தங்களது இனத்துவ மற்றும் பூர்வீக வேறுபாடுகளைக் கடந்து 'முஸ்லிம்கள்' என்றே தங்களை பொதுவாக அழைத்துக் கொள்ளும் போக்கு வளர்ந்துள்ளமை நோக்கத்தக்கது.

நாடு தழுவிய ரீதியில் கடந்த 2012 இல் மேற்கொள்ளப்பட்ட சனத்தொகைக் கணிப்பீட்டின்படி மலாயர்களை உள்ளடக்கிய வகையில் 9.6 வீதமான முஸ்லிம்கள் இலங்கையில் வாழ்கின்றனர் (Department of Census and Statistics, 2015). இவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் வடக்கு-கிழக்குப் பிராந்தியத்தில் வாழ்கின்றனர். இப்பிராந்தியத்தில் பெரும்பான்மையினராக வாழ்கின்ற தமிழர்களுடன் அயலவர்களாகவும் அவர்களது மொழி மற்றும் கலாசாரப் பாரம்பரியங்களைப் பகிர்ந்து கொண்டும் இம்முஸ்லிம்கள் வாழ்கின்றனர். மீதமுள்ள மூன்றில் இரண்டு பகுதியினர் வடக்கு-கிழக்குப் பிராந்தியத்துக்கு வெளியே நாடு பூராகவும் சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் பரந்து வாழ்கின்றனர். ஆனாலும், அம்முஸ்லிம்களிலும் பெரும்பான்மையானவர்கள் தமிழைத் தாய் மொழியாகப் பேசுகின்றமை குறிப்பிடத்தக்கது. சிறு தொகையினரான முஸ்லிம்கள் சிங்களத்தையும் மலாய் (மலாய் முஸ்லிம்கள்) மொழியையும் தமது தாய் மொழியாகக் கொண்டிருப்பதுடன் மதம் (இஸ்லாம்) ஒன்றையே தமது இன தனித்துவமாகவும் அடையாளமாகவும் முன்னிலைப்படுத்துவதும் குறிப்பிடத்தக்கது (Yusoff, Sarjoon, Hussin & Mohamad Ghazali, 2016).

தமது மத அடிப்படைகளை முன்னிலைப்படுத்திக்கொண்டு சமூக வாழ்வு மற்றும் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த முஸ்லிம்களின் நேர்மையான செயற்பாடுகள் சுதேசிய மக்களையும் ஆட்சியாளர்களையும் வெகுவாகக் கவர்ந்திருந்தன. இதனால், சுதேசிய மன்னர்களின் ஆட்சிக் காலங்களில் அம்மன்னர்கள் தமது அரச அவைகளில் பொறுப்புமிக்க பல்வேறு பதவிகளை முஸ்லிம்களுக்கு வழங்கியதுடன் முஸ்லிம்கள் தமது மத மற்றும் கலாசார தனித்துவங்களைப் பேணுவதற்கும் விரும்பிய பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் தேவையான உரிமைகளையும் போதியளவு சுதந்திரத்தையும் வசதிகளையும் வழங்கியிருந்தனர் (சர்ஜூன், 2019). ஆயினும், இலங்கையைக் கைப்பற்றி காலனித்துவ ஆட்சியை மேற்கொண்ட போத்துக்கீசர்களும் ஒல்லாந்தர்களும் முஸ்லிம்களை எதிரிகளாகவே நோக்கியதுடன் அவர்களுக்கு எதிரான பல்வேறு அடக்குமுறைச் சட்டங்களை இயற்றி அமுலாக்கியதுடன் அடக்குமுறைச் செயற்பாடுகளிலும் ஈடுபடலாயினர். போத்துக்கீசர்களின் அடக்குமுறைச் சட்டங்களினால், சமூக, பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்டு கண்டி இராஜ்ஜிய மன்னனிடம் புகலிடம் தேடிய கொழும்பு மற்றும் அதனை அண்டிய மேற்குப் பிராந்தியத்தில் வாழ்ந்த முஸ்லிம்களை மன்னர் செனரத் தனது ஆள்புலப் பிரதேசங்களான கண்டியின் பல பகுதிகளிலும் கிழக்கின் கரையோரப் பிரதேசங்களிலும் குடியேற்றினார். கிழக்கு மாகாணத்தின் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த மட்டக்களப்புப் பிராந்தியத்தில் மட்டும் 1626 இல் சுமார் 4000 முஸ்லிம்களைக் குடியேற்றியுள்ளார் (McGilvray & Raheem, 2007:06). இக்குடியேற்றங்களானது கிழக்குப் பிராந்தியத்தின் குடித்தொகையில் முஸ்லிம் சமுதாயத்தினரின் பங்கு அதிகரிக்கக்

காரணமானது. ஆதலால், தமது மத தனித்துவத்தை பேணிக்கொண்டு இப்பிராந்தியத்தில் ஏற்கனவே வாழ்ந்துவந்த தமிழ்-முஸ்லிம் சமுதாயத்தினருடன் ஒட்டி உறவாடி அவர்களின் கலாசாரப் பாரம்பரியங்களைப் பகிர்ந்து கொண்டு முஸ்லிம்கள் வாழலாயினர்.

பிரித்தானியரின் காலனித்துவ ஆட்சிக் காலத்திலேயே முஸ்லிம்களிடையே அறிவியல் ரீதியான எழுச்சியும் அரசியல் சிந்தனைகளும் வேரூண்றலாயின. பிரித்தானியர்கள் அரசியல் சீர்திருத்தங்களை முன்வைத்து சுதேசிய மக்களுக்கு அரசியல் பிரதிநிதித்துவத்தை வழங்கியபோது தாமும் ஒரு தனித்துவமான இனக் குழுமம் என்ற அடிப்படையை முன்வைத்து முஸ்லிம்களும் தங்களுக்கான தனியான அரசியல் பிரதிநிதித்துவத்தை சட்டவாக்கச் சபையில் வேண்டினர். ஆனாலும், அப்போது படித்த இலங்கையரைப் பிரதிநிதித்துவப்படுத்தியவரும் பிரபல தமிழ் அரசியல் தலைவருமான பொன்னம்பலம் இராமநாதன் (பின்னர் சேர்) என்பவர் ''முஸ்லிம்கள் இஸ்லாமியத் தமிழர்களே – நான் அவர்களையும் (முஸ்லிம்களையும்) பிரதிநிதித்துவம் செய்கின்றேன். ஆதலால், முஸ்லிம்களுக்கு தனியான அரசியல் பிரதிநிதித்துவம் தேவையில்லை'' என்ற வாதத்தை முன்வைத்து முஸ்லிம்களின் தனித்துவ அடையாள அரசியல் பிரதிநிதித்துவத்தை மட்டுமன்றி அவர்களின் இன தனித்துவத்தையும் கேள்விக்குட்படுத்த முனைந்தார் (பார்க்க: Yusoff et al., 2016; Imtiyaz & Hoole, 2011). இராமநாதனின் வாதமானது, அதுவரை சமயம் ஒன்றே தம்மை தனித்துவமாக அடையாளப்படுத்தப் போதுமானது என்று நம்பியிருந்த முஸ்லிம்கள் தமது தனித்துவமான பூர்வீகத்தையும் இன அடையாளத்தையும் உறுதிப்படுத்தும் முயற்சியில் ஈடுபட வழிவிட்டது. இதற்காக முஸ்லிம் சீர்திருத்தவாதிகளான ஐ.எல்.எம்.அப்துல் அஸீஸ் மற்றும் சித்திலெப்பை போன்றவர்கள் மேற்கொண்ட முயற்சிகளானவை முஸ்லிம்களின் இன தனித்துவத்தை உறுதிப்படுத்தியதுடன் முஸ்லிம்களுக்கு தனியான அரசியல் பிரதிநித்துவத்தை பெற்றுக் கொடுப்பதற்கும் வழிவிட்டது (சர்ஜுன், 2017).

தனியான அரசியல் பிரதிநிதித்துவத்துக்கான முஸ்லிம் சீர்த்திருத்தவாதிகளின் கோரிக்கையை அடுத்து பிரித்தானிய அரசாங்கம் முதன் முதலில் 1889 இல் தனியானவொரு முஸ்லிம் பிரதிநிதியை – எம்.சி. அப்துல் ரஹ்மான் என்பவரை – சட்டவாக்கச் சபைக்கு நியமித்தது. இதனால், படிப்படியாக முஸ்லிம்கள் அரசியல் செயற்பாடுகளில் அக்கறை காட்டத் தொடங்கியபோதும் அவர்களின் பங்குபற்றல் ஒரு தனித்துவமான அரசியல் இயக்கத்தின் ஊடாக ஒழுங்கமைக்கப்பட்டதாக இருக்கவில்லை. 1931 இல் டொனமூர் ஆணைக்குழு (Donoughmore Commission) முன்வைத்த அரசியல் சீர்திருத்தத்தின் ஊடாக சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டதை அடுத்து அரசியலில் ஈடுபட்ட முஸ்லிம் தலைவர்கள் அப்போது பொரும்பான்மையினத் தலைவர்களினால் உருவாக்கப்பட்டு தேசிய அளவில் செயற்பட்ட அரசியல் கட்சிகளினூடாகவே ஈடுபட்டனர். சந்தர்ப்ப சூழலுக்குச் சாதகமாகவும் சலுகைகளை நோக்காகக் கொண்டுமே அப்போது முஸ்லிம் தலைவர்கள் தமது அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்தனர். தனியாட்களின் தலைமைத்துவங்களில் அதிகளவில் கவரப்பட்டே முஸ்லிம்களும் அரசியல் செயற்பாடுகளில் பெரிதும் ஈடுபட்டனர். அத்துடன், இக்கால முஸ்லிம் தலைமைத்துவங்கள் தேசிய அல்லது பெரும்பான்மையினக் கட்சிகளுக்கு கட்டுப்பட்டனவாகவும் பெரும்பான்மை கட்சிகளின் சலுகைகளுடன் தமது நலனை விருத்தி செய்வனவாகவுமே காணப்பட்டன. தவிர, இம்முஸ்லிம் தலைமைகள் தலைநகரை (கொழும்பை) மையமாகக் கொண்ட உயர் குழாம் வகுப்பினராகவும் இருந்தனர் (Padnish, 1997; Yusoff, Sarjoon, Hussin & Ahmed, 2017).

உண்மையில், இலங்கை முஸ்லிம்களின் புவியியல் ரீதியான குடிசனப் பரம்பலும் கூட ஆரம்ப காலங்களில் அவர்களின் அரசியல் செயற்பாட்டிலும் சார்புநிலையிலும் பெரும் தாக்கத்தை

ஏற்படுத்தியிருந்துள்ளது என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயமே. சுதந்திரத்தின் பின்னரான காலப்பகுதியை எடுத்து நோக்கின் வடக்கு-கிழக்குப் பிராந்தியத்தில் வாழ்ந்த முஸ்லிம்களில் அதிகமானோர் விவசாயம்சார் தொழில் நடவடிக்கைகளில் அதிகளவில் ஈடுபடுவோராகவும் அப்பிராந்தியத்தில் பாரம்பரியமாகவும் பெரும்பான்மையாகவும் வாழ்ந்த தமிழ் மக்களுடன் இணக்கப்பாட்டுடனும் வாழ்ந்து வந்துள்ளனர். வடக்கு-கிழக்குக்கு அப்பால் வாழ்ந்த முஸ்லிம்கள் பெரும்பாலும் வர்த்தக நோக்குடையோராகவும் அப்பகுதிகளில் பெரும்பான்மையாக வாழ்ந்த சிங்கள மக்களுடன் இணக்கப்பாட்டை பேணிக்கொண்டுமே வாழ்ந்து வந்துள்ளனர். இதனால், அரசியல் செயற்பாட்டின்போதும் கூட இவ்விரு பகுதி முஸ்லிம்களும் மேற்படி இரு பெரும்பான்மையினக் குழுக்களுடனும் இணைந்து செல்வதற்கே அக்கால முஸ்லிம் அரசியல் தலைவர்கள் தூண்டப்பட்டிருந்தனர். ஆரம்பத்தில் சிங்கள பெரும்பான்மையினத் தலைவர்களால் உருவாக்கப்பட்ட கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி (Uniteed National Party) மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி (Sri Lanka Freedom Party) போன்றவற்றிலும் பின்னர் தமிழ்த் தலைவர்களால் தோற்றுவிக்கப்பட்ட தமிழரசுக் கட்சி (Federal Party), தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி (Tamil People Liberation Front) என்பவற்றின்பாலும் முஸ்லிம்கள் கவரப்பட்டு தமது அரசியல் பயணத்தை தொடர்ந்திருந்தனர். விசேடமாக, சுதந்திரத்துக்கு பின்னர் இன முரண்பாடு கூர்மையடையும் வரையான காலம் வரை (1980 கள் வரை) வடக்கு-கிழக்குக்கு வெளியேயுள்ள முஸ்லிம்களில் அதிகாமானோர் ஐக்கிய தேசியக் கட்சிக்கே அதிகளவான ஆதரவைத் தெரிவித்து வந்துள்ளதுடன் அக்கட்சியிலிருந்தே அதிகளவான முஸ்லிம்கள் மக்கள் பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்யப்பட்டு, அமைச்சுக்களையும் ஏனைய அரசியல் பதவிகளைப் பெற்றுள்ளமை நோக்கத்தக்கது. அவ்வாறே, வடக்கு-கிழக்குப் பிராந்தியங்களில் தமிழ்க் கட்சிகளின் ஊடாகவே அதிகளவான முஸ்லிம் தலைவர்கள் பாராளுமன்றம் சென்று தேசிய அளவில் புகழ் பெற்றிருந்திருப்பதும் நோக்கத்தக்கது (பார்க்க: Padnish, 1979).

புவியியல் ரீதியான குடிசனப் பரம்பல் வேறுபாட்டுடன் உயர் குழாம் ஆதிக்கம் என்பதும் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் மேற்கு அல்லது கொழும்பு சார்பானவர்களாகவே செயற்படுவதற்கு துணை புரிந்திருந்தது. இக்காலப் பகுதியில் முஸ்லிம்களின் மத மற்றும் இனத்துவ அடையாளத்தை நோக்கிய நகர்வாக முஸ்லிம் அரசியல் கொண்டுசெல்லப்பட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், கிழக்கு முஸ்லிம்கள் மேற்கு சார்பு முஸ்லிம் தலைவர்களால் புறக்கணிக்கப்பட்டதாக உணர்ந்தபோது அவர்கள் கிழக்கில் தமிழர்களின் அரசியலோடு இணைந்து செயற்பட முற்பட்டுள்ளர். இக்காலப்பகுதியில் முஸ்லிம்களுக்கு என்று தனியான அரசியல் கட்சியை உருவாக்கி வளர்ப்பதற்கான சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அவை தோல்வியையே அடைந்திருந்தமை நோக்கத்தக்கது.

## 2. 1980 களின் பின்னரான முஸ்லிம்களின் அரசியல் போக்கு: தனிக் கட்சி அரசியலும் செல்வாக்கும்

1977 பொதுத் தேர்தலை அடுத்து ஆறில்-ஐந்து பொரும்பான்மையான பாராளுமன்ற பிரதிநிதித்துவ பலத்துடன் பதவிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் செயற்பாடுகள் விசேடமாக 1978 ஆம் ஆண்டு அவ்வரசாங்கம் உருவாக்கி ஏற்றுக் கொண்ட புதிய அரசியலமைப்பும் அதன் பின்னரான செயற்பாடுகளும் இலங்கையில் சிறுபான்மைச் சமுதாயத்தினரிடையே தீவிர அதிருப்தி நிலையை ஏற்படுத்தின. இதனால், தமிழர்கள் தாங்கள் பொரும்பான்மையாக வாழ்ந்துவந்த வடக்கு-கிழக்குப் பிராந்தியத்தில் தங்களுக்கான தனியான அரசொன்றை உருவாக்கும் நோக்கில் ஆயுதம் ஏந்திப் போராடும் நிலைக்கு உந்தப்பட்டனர். இந்நிலை வடக்கு-கிழக்குப் பிராந்தியத்தில் அரசியல் உட்பட பல்வேறு நிலைகளில் ஒத்துழைப்போடு வாழ்ந்துவந்த தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையேயான உறவிலும்

விரிசலை ஏற்படுத்தியது. ஆதலால், 1980 களின் ஆரம்பத்திலிருந்து தமிழர்களாலும் ஏமாற்றப்பட்டு கைவிடப்படுகின்றோம் என்று முஸ்லிம்கள் உணரலாயினர். 1981 ஆம் ஆண்டு இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலில் இந்நிலை வெளிப்படையாகியது. தவிர, முஸ்லிம்களுக்கு எதிரான செயற்பாடுகளும் கிழக்கில் அதிகளவில் நடந்தேறத் தொடங்கின. இன முரண்பாட்டின் கூர்மையும் உள்நாட்டு யுத்தத்தின் தாக்கமும் இனத்துவ அரசியலை முன்னிலைப்படுத்தத் தூண்டியபோது முஸ்லிம்களும் பெருமளவு இழப்பைச் சந்தித்துடன் அரசியல் ரீதியாக புறக்கணிப்பையும் எதிர்நோக்கினர் (Yusoff, Hussin & Sarjoon, 2014a). இச்சூழ்நிலை தங்களது இருப்பையும் நலன்களையும் பாதுகாக்க தனித்துவமான ஓர் அரசியல் கட்சியை உருவாக்க வேண்டிய தேவையையும் முஸ்லிம்களுக்கு ஏற்படுத்தியது.

### *புதிய முஸ்லிம் அரசியல் கட்சியின் உருவாக்கம்*

1981 இல் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலின் பின்னரான சம்பவங்கள் பெற்றுத் தந்த அனுபவங்கள் ஒரு தனித்துவ முஸ்லிம் அரசியல் கட்சியை உருவாக்க முஸ்லிம் அரசியல் சிந்தனையாளர்களைத் தூண்டியது. அத்துடன், 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பில் அறிமுகம் செய்யப்பட்ட விகிதாசாரத் தேர்தல் முறையும் கூட முஸ்லிம்களிடையே தனியான அரசியல் கட்சி தோற்றம் பெறுவதைத் தூண்டுவதாக அமைந்திருந்தது (Warnapala & Yehiya, 2005). இதனால், பெருமளவில் கவரப்பட்டவர் எம்.எச்.எம்.அஷ்ர.்.ப் என்பவரே. அப்போது சிரேஷ்ட சட்டத்தரணியாக புகழ்பெற்றிருந்த அஷ்ர.்.ப் அக்காலத்தில் முஸ்லிம்களுக்காக குரல்கொடுத்துவந்த அரசியல் இயக்கமான முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியில் இணைந்தும் பின்னர் தமிழர்களின் விடுதலைக்காக குரல்கொடுத்துவந்த தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைவர்களுடன் இணைந்தும் அரசியலில் ஈடுபட்டிருந்தார். 1981 மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல் காலத்தில் கிடைத்த ''தனியான அரசியல் கட்சி மூலமே முஸ்லிம் சமுகத்தின் அரசியல் ரீதியான பலத்தினை உறுதிப்படுத்த முடியும் – முஸ்லிம்களுக்கு பாதுகாப்பு அரணை உருவாக்க முடியும்'' என்ற படிப்பினையின் ஊடாக 1981.09.21 இல் தனது முயற்சியினால் ''ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்'' எனும் முஸ்லிம் சமூக சேமநல இயக்கத்தை கிழக்கிலங்கையிலுள்ள முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட நகரங்களில் ஒன்றான காத்தான்குடியில் தொடங்கிவைத்தார் (சர்ஜுன், 2020; Yusoff et al., 2017).

1980 களில் நடுப்பகுதியில் முஸ்லிம்களுக்கு எதிராக நடந்தேறிய சம்பவங்கள் விசேடமாக, அரசியல் ரீதியாக முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டமையானது ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் எனும் இயக்கத்தை ஓர் அரசியல் கட்சியாக மாற்ற வேண்டிய கட்டாயச் சூழ்நிலையை ஏற்படுத்தியது. தவிர, தேசிய ரீதியில் இலங்கை முஸ்லிம்களை வழிநடாத்தும் ஓர் அரசியல் கட்சியோ அல்லது தலைமைத்துவமோ இல்லாத வெற்றிடமும் காணப்பட்டது. மேலும், 1980 இன் நடுப்பகுதியில் கிழக்கில் முஸ்லிம்கள் மீதான ஆக்கிரமிப்பு வலுவடைந்ததுபோது அதனை தட்டிக்கேட்பதற்கோ அல்லது அதற்கு எதிராகக் குரல் கொடுப்பதற்கோ முஸ்லிம்களிடம் எந்தவொரு அரசியல் நிறுவனமும் இருக்காமையும் ஒரு பாரிய குறைபாடாகவே நோக்கப்பட்டது (Yusoff et al., 2017). இந்த நெருக்கடியான சூழ்நிலையால் முஸ்லிம் இளைஞர்கள் விரக்தி நிலையை அடைந்து வன்முறைக்குள் உந்தப்படத் தயாராகவிருந்தனர்.

இன முரண்பாட்டுச் சூழலால் வடக்கு-கிழக்குப் பிராந்திய முஸ்லிம்கள் பாதுகாப்பற்றுக் கைவிடப்பட்டிருந்த நிலையை சாதகமாகப் பயன்படுத்தி ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸை ஓர் அரசியல் கட்சியாக அஷ்ர.்.ப் பிரகடனம் செய்து வைத்தமை விரக்தியுற்று வன்முறையின்பால் நாடவிருந்த முஸ்லிம் இளைஞர்களைப் பாதுகாத்தது மட்டுமன்றி முஸ்லிம் அரசியலுக்கு அவரது தலைமைத்துவம் ஒரு சிறந்த வழிகாட்டலை வழங்கியது என்பதையும் சுட்டிக்காட்டியது.

1986.11.29 ஆம் திகதி இலங்கை அரசியல் வரலாற்றில் தனித்துவமிக்க, இஸ்லாமியக் கொள்கைகளின் அடிப்படையிலமைந்த ஓர் அரசியல் கட்சியாக 'ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்' (Sri Lanka Muslim Congress) உதயமானது (Yusoff et al., 2017). இது இலங்கை முஸ்லிம் அரசியலில் மட்டுமன்றி தேசிய அரசியலிலும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியது. பல்வேறு எதிர்ப்புக்களுக்கும் சவால்களுக்கும் மத்தியில் கட்சியை வழி நடாத்துவதில் அஷ்ர∴பின் தலைமைத்துவம் பெரிதும் முயற்சித்தது. இஸ்லாமிய மதச் சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு முஸ்லிம் காங்கிரஸ் வழிநடாத்தப்பட்டதுடன் முஸ்லிம்களின் இன மற்றும் மத தனித்துவத்துக்காகவும் அவர்களின் இருப்புக்காகவும் உரிமைக்காகவும் பெரிதும் குரல் கொடுத்தது.

அஷ்ர∴பின் தனிக் கட்சி அரசியலுக்கு முஸ்லிம்களின் விசேடமாக, வடக்கு-கிழக்கு முஸ்லிம்களின் ஆதரவு தொடர்ந்தேற்சியாக அதிகரிக்கலானது. இதனால், 1987 இல் பல்வேறு வகையிலமைந்த வெளிப்படையான எதிர்ப்புக்களுக்கு மத்தியிலும் கிழக்கில் நடக்கவிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் ஓர் அரசியல் கட்சியாக அங்கீகரிக்கப்பட்டிராத நிலையிலும் கூட 10 உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிட்டது. யுத்தச் சூழல் காரணமாக குறித்த தேர்தல் நடந்தேறாதபோதும் ஒரு பிரதேச சபையில் (ஓட்டமாவடி) போட்டியின்றி வெற்றிபெற்ற நிகழ்வு தனித்துவக் கட்சி அரசியல் மீதிருந்த முஸ்லிம்களின் அவாவினை எடுத்துக் காட்டியது.

1988 இல் நடந்த மாகாண சபைத் தேர்தல்களில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடு பூராகவும் உள்ள 8 மாகாண சபைகளில் 29 ஆசனங்களைப் பெற்றதுடன் இணைந்த வடக்கு-கிழக்கு மாகாண சபையில் மட்டும் 17 ஆசனங்களைப் பெற்று பிரதான எதிர்க் கட்சி என்ற நிலையை எட்டியது (பார்க்க: அரசாங்க அச்சுத் திணைக்களம், 1990). இத்தேர்தலில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடு பூராகவும் 7.56 வீதமான வாக்குகளைப் பெற்று தேசிய மட்டத்தில் மூன்றாவது பெரிய அரசியல் கட்சி என்ற நிலையை அடைந்தது. இது தேசிய ரீதியில் முஸ்லிம் அரசியலில் தனித்துவக் கட்சி எனும் கருத்தியல் எழுச்சி பெற்று அங்கீகரிக்கப்பட்டு வருவதனை சுட்டிக் காட்டியது. இதனால், அடுத்து நடக்கவிருந்த ஜனாதிபதித் தேர்தலின்போது நாட்டில் அப்போது தேசிய அளவில் செல்வாக்குப் பெற்றிருந்த இரண்டு பிரதான கட்சிகளும் தனிக் கட்சி ஊடாக முஸ்லிம் அரசியலைக் கொண்டுநடாத்திய அஷ்ர∴பின் ஆதரவை நாடியமை நோக்கத்தக்கது. இதன்போதே, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பேரம்பேசும் சக்தியாக வளர்ந்திருந்தது என்பதற்கு அப்போது அஷ்ர∴ப் சிறுபான்மையினரின் அரசியலுக்கு பாதகமாகவிருந்த விகிதாசாரத் தேர்தல் முறையின் வெட்டுப்புள்ளி முறையில் மாற்றம் செய்யும்படி (அதாவது, பொதுத்தேர்தலுக்காக வெட்டுப்புள்ளியை 12.5 வீதத்திலிருந்து 5 வீதமாகக் குறைக்கும்படி) அப்போதைய ஜனாதிபதியும் ஜனாதிபதி வேட்பாளருமான ரணசிங்க பிரேமதாசாவிடம் கோரிக்கையை முன்வைத்து அதனை அரசியலமைப்புக்கான 15 ஆவது திருத்தத்தின் ஊடாக நிறைவேற்றிக் கொண்ட சம்பவம் சுட்டிக்காட்டுகின்றது (பார்க்க: Warnapala & Yehiya, 2005:444 & Warnapala, 2004). இவ்வெற்றியானது அஷ்ர∴ப் பாராளுமன்ற உறுப்பினராக இல்லாதிருந்த சந்தரப்பத்தில் அவரது தனித்துவ முஸ்லிம் கட்சியின் பலத்தின் ஊடாக அடையப் பெற்றது என்பதே நோக்கத்தக்கது. உண்மையில், இந்த வெட்டுப்புள்ளி குறைப்பானது பின்னரான காலங்களில் சிறுபான்மையினரின் தேர்தல் அரசியல் செயற்பாட்டுக்கும் வெற்றிக்கும் பெரிதும் பங்களிப்பு செய்திருந்தமை நோக்கத்தக்கது.

1989 இல் நடந்த பொதுத் தேர்தலில் 13 தேர்தல் மாவட்டங்களில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிட்டது. முஸ்லிம்களின் வாக்குகளைப் பெறுவதற்கு இரு பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் முனைப்புடன் செயற்பட்டபோது முஸ்லிம்

காங்கிரஸ் தனியாக தேர்தலை எதிர்கொண்டு 4 பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தை இத்தேர்தலில் பெற்றமையானது அதன் குறுகியகால அரசியல் வெற்றியையும் வளர்ச்சியையும் பறைசாற்றி நின்றது. இத்தேர்தலில் தேசிய ரீதியில் மூன்றாவது கூடியளவு வாக்குகள் பெற்ற (3.6 %) கட்சியாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் எழுச்சி பெற்றது (தேர்தல்கள் செயலகம், 1991). கிழக்கு மாகாணத்தில் விசேடமாக, முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்ட அம்பாரை (திகாமடுல்ல தேர்தல் மாவட்டம்) மாவட்டத்தில் அதுவரை பெரும்பான்மைக் கட்சிகளில் போட்டியிட்டு தொடர்ந்தேற்சியாக வெற்றியடைந்து வந்திருந்த முஸ்லிம் பிரதிநிதிகளை தோற்கடிக்கச் செய்வதில் முஸ்லிம் காங்கிரஸ் வெற்றி பெற்றது. அப்பொதுத் தேர்தலில் அஷ்ர.்.ப் மட்டுமே முஸ்லிம்கள் சார்பில் அம்பாரை மாவட்டத்தில் அத்தேர்தலில் வெற்றி பெற்றிருந்தார் என்பது நோக்கத்தக்கது. அதுவரை அஷ்ர.்.பையும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸையும் பிரயோசனமற்றது என விமர்சித்த அரசியல் தலைவர்களுக்கு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் வெற்றி பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

1989 பொதுத் தேர்தல் வெற்றியை அடுத்து அஷ்ர.்.பும் அவரது தனித்துவ முஸ்லிம் கட்சியும் தேசிய மற்றும் சர்வதேச அளவில் பேசுபொருளாக மாறின. இலங்கையில் இனத்துவ மற்றும் இன மேலாதிக்க அரசியல் கோலோட்சிய சூழலில் ஒரு முஸ்லிம் அரசியல் கட்சியின் பிரதிநிதி பாராளுமன்றத்தில் குர்ஆன் வசனங்களை கூறி தனது உரையினை ஆரம்பித்து முடித்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. முஸ்லிம்கள் அரசியல் ரீதியாக ஓர் இயக்கமாக வெற்றிகரமாகத் திரண்டுவிட்டார்கள் என்பதை இது சுட்டிக் காட்டியது. 4 பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தையே கொண்டிருந்தபோதிலும் முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் மிகவும் முக்கியத்துவம் பெறலாயினர். முஸ்லிம்களின் உண்மையான மக்கள் பிரதிநிதிகள் இவர்கள் என்பதை விரும்பியோ விரும்பாமலோ சிங்கள மற்றும் தமிழ்த் தலைமைகள் ஏற்கவேண்டிய சூழ்நிலை உருவானது. இம்முஸ்லிம் பிரதிநிதிகள் பேச்சுக்களை விசேடமாக அஷ்ர.்.பின் பேச்சுக்களை முஸ்லிம்களின் குரலாக எல்லோரும் அவதானிக்கலாயினர். அதுவரை பெரும்பான்மையினக் கட்சிகளில் ஒட்டிக்கொண்டு பெரும் அமைச்சுப் பதவிகளைக் கூட பெற்றிருந்த முஸ்லிம் அரசியல் தலைவர்கள் முக்கியத்துவம் அற்றவர்களாக மாறலாயினர். இந்தப் பாராளுமன்றத்தை அஷ்ர.்.பும் அவரது கட்சிப் பிரதிநிதிகளும் நன்கு பயன்படுத்திக் கொண்டனர். இக்காலப்பகுதியில் முஸ்லிம் கங்கிரஸ் தனது ஆதரவை தேசிய அரசாங்கத்துக்கு நேரடியாக வழங்காவிட்டாலும் தனக்கிருந்த அரசியல் ஆளுமையினையும் பலத்தினையும் கொண்டு முஸ்லிம்களின் நியாயமானளவு உரிமைக்காக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிறுவகத் தலைவர் அஷ்ர.்.ப் குரல்கொடுத்திருந்தார் (பார்க்க: சர்ஜூன், 2020).

### *தனித்துவ முஸ்லிம் கட்சி தேசிய அரசியலில் சங்கமித்தல்*

1994 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தல் காலக்கட்டம் இலங்கை அரசியல் வரலாற்றில் மிக முக்கியவொரு காலகட்டமாகும். 1977 இலிருந்து 17 வருடங்களாக நிலவிய ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியானது சிறுபான்மை மக்களிடத்தில் மட்டுமன்றி பெரும்பான்மையினரிடத்திலும் பெரும் அதிருப்தி நிலையை ஏற்படுத்தியிருந்தது. இன முரண்பாட்டின் தீவிரத்தால் தமிழர்களிடையே தனியான அரசொன்றுக்கான போராட்டம் கூர்மையடைந்திருந்தது. இந்நிலையில் சந்திரிக்கா குமாரதுங்கா தலைமையிலான பொதுஜன முன்னணியும் அஷ்ர.்.ப் தலைமையிலான ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸும் மக்கள் மத்தியில் பிரபல்யமும் செல்வாக்கும் பெற்றிருந்தனால் மக்களின் ஆட்சி மாற்றத்திற்கான மனோநிலையைப் புரிந்துகொண்டு இணக்கப்பாட்டு அரசியலைக் கொண்டுநடாத்த இரு தலைவர்களும் முன்வந்தனர். அஷ்ர.்.ப்– சந்திரிக்கா தேர்தல் கூட்டு ஒப்பந்தம் (1994) இருதரப்பு இணைப்பு அரசியலையும் பலப்படுத்தியது.

இத்தேர்தலில், பொதுஜன முன்னணி அதிக ஆசனங்களை பெற்றிருந்தபோதும் அக்கட்சி ஆட்சியமைப்பதற்குத் தேவையான 8 ஆசனங்களில் 7 ஆசனங்களை தனித்துவ முஸ்லிம் அரசியல் கட்சியாகிய ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பெற்றிருந்தது (Goonerathne & Munaratne, 1996). கூட்டு உடன்படிக்கையை மதிக்கும் நோக்கில் மத்தியில் கூட்டாட்சி அமைப்பதற்கு உடன்பட்டு ஐக்கிய தேசியக் கட்சியின் 17 வருட தொடர்ச்சியான ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்ததுடன் முஸ்லிம்களுக்கான நியாயமான உரிமைகள் மற்றும் நலன்கள் தொடர்பில் பேரம்பேசி அரசாங்கத்தில் தமக்குரிய பங்கினைப் பெற்றுக்கொண்டு முஸ்லிம் காங்கிரஸ் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் சம பங்காளியானது. இந்நிகழ்வு இலங்கை தேசிய அரசியலிலும் முஸ்லிம் அரசியலிலும் மாபெரும் திருப்புமுனையாக அமைந்தது. உண்மையில், 1994 பொதுத் தேர்தல் முடிவுகளும் அதனைத் தொடர்ந்த சம்பவங்களும் 1977 இற்குப் பின்னரான இலங்கையின் அரசியல் வரலாற்றில் முக்கிய மாற்றத்தை குறிகாட்டி நின்றன (Jayasundara-Smith, 2011). இலங்கையில் எந்தக் கட்சி அரசாங்கத்தை அமைக்கும் என்பதைத் தீர்மானிக்கும் அளவுக்கு முஸ்லிம்களின் தனித்துவக் கட்சியானது அரசியல் ரீதியில் பலம் பெற்றுவிட்டதை இத்தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டின.

இலங்கை அரசியலில் இனவாதச் சிந்தனைகள் மேலோங்கி செல்வாக்குச் செலுத்தியிருந்த ஒரு காலகட்டத்தில் ஒரு முஸ்லிம் அரசியல் கட்சியும் தலைவனும் கூட நாட்டின் அரசியல் தலைவிதியை அல்லது தலைமை ஆட்சியாளரை தீர்மானிக்கும் சக்தியாக முடியும் (King-maker or Queen-maker) என்பது இலங்கையின் பெரும்பான்மையின மக்களுக்கும் அவர்களின் அரசியல் தலைவர்களுக்கும் 1994 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் முடிவுகள் மூலம் புரியவைக்கப்பட்டது (Keethaponkalan, 2008). உண்மையில், கட்சி அரசியல் நோக்கில் அணுகினால் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தோற்றமும் தேர்தல் அரசியலில் அதன் செல்வாக்கும் ஐக்கிய தேசியக் கட்சியையே பெருமளவுக்குப் பாதித்தது எனலாம். ஏனெனில், முஸ்லிம்களின் பெரும்பான்மையானோர் ஐக்கிய தேசியக் கட்சிக்கே தொடர்ந்தும் ஆதரவளித்து வந்திருந்தனர் என்பதும் முஸ்லிம்களின் பரம்பரையான இந்த அரசியல் சார்புநிலையில் முஸ்லிம் காங்கிரஸானது தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதும் குறிப்பிடத்தக்கது (Warnapala & Yehiya, 2005).

தேர்தல் காலத்திலும் தேர்தலின் பின்னரும் முஸ்லிம்களின் உரிமைகள், அபிவிருத்தி, இருப்பு மற்றும் ஒற்றுமை போன்ற விடயங்களில் முஸ்லிம் காங்கிரஸ் தீவிர கவனம் செலுத்தியது. அமைச்சு பதவிகள் ஊடாக முஸ்லிம் சமுதாயத்தின் அபிவிருத்திக்காக பாரிய திட்டங்களை முன்னெடுத்தது. யுத்தத்தால் உயர் கல்வி வாய்ப்புக்களை இழக்கும் நிலையிலிருந்த முஸ்லிம் இளைஞர்களின் உயர் கல்வி வாய்ப்புக்களை அதிகரிக்கும் நோக்கில் அதுவரை பொறுப்புமிக்க அமைச்சு பதவிகள் பெற்றிருந்த முஸ்லிம் அரசியல் தலைவர்களால் செய்ய முடியாதிருந்த சாதனையாக ஆட்சி அதிகாரத்தைப் பெற்ற மிகக் குறுகியவொரு காலத்தினுள் முஸ்லிம்கள் பெரும்பான்மையாகவுள்ள தென்கிழக்குப் பிராந்தியத்தில் தனியானவொரு பல்கலைக்கழகத்தையே முஸ்லிம் காங்கிரஸ் பெற்றுக் கொடுத்தது. முஸ்லிம் சமுதாயத்தினரின் கலாசார அபிவிருத்தியுடன் பொருளாதார அபிவிருத்திக்காகவும் திட்டங்களைத் தீட்டி முஸ்லிம் காங்கிரஸ் முன்னெடுத்தது (Sarjoon, 2020; Yusoff et al., 2017).

இன முரண்பாட்டில் சிக்கித் தவித்திருந்த இலங்கையில் குறிப்பாக வடக்கு-கிழக்குப் பிராந்தியங்களில் வாழ்கின்ற முஸ்லிம் சிறுபான்மையினருக்கும் பிரச்சினைகள் உள்ளன – அவர்களும் இன முரண்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் – என்பதை சிங்கள மற்றும் தமிழ்

அரசியல் தலைவர்கள் புரிந்து கொள்வதற்கு முஸ்லிம் காங்கிரஸ் காத்திரமான பங்பளிப்பைச் செய்தது. குறிப்பாக, இன முரண்பாட்டுத் தீர்வு முயற்சியில் முஸ்லிம்களது நலன்களும் கவனத்தில் கொள்ளப்பட்டு இன முரண்பாட்டுத் தீர்வுக்கான அரசியல் அதிகாரப் பகிர்வுத் திட்டத்தில் முஸ்லிம்களுக்கும் நியாயமான அதிகாரப் பகிர்வு வழங்கப்படல் வேண்டும் என்பதை ஆட்சியாளர்கள் அங்கீகரிப்பதற்கு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் முனைப்புடன் செயற்பட்டது. அதலால், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிறுவகத் தலைவர் அஷ்ர∴பின் பங்களிப்புடன் உருவாக்கப்பட்ட புதிய அரசியலமைப்புத் திட்டத்துக்கான முன்மொழிவுகளில் (1997-2000) முஸ்லிம்களின் அரசியல் சுயாட்சிக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளும் வகையில் முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்டிருந்த பிராந்தியமான தென்கிழக்குப் பிராந்தியத்தை உள்ளடக்கிய ஓர் பிராந்திய அதிகார அலகும் முன்மொழியப்பட்டிருந்தமை நோக்கத்தக்கது (பார்க்க: Yusoff, Sarjoon & Hussin, 2014b).

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் எழுச்சியினை அடுத்து 1990 களில் முஸ்லிம் அரசியலில் இனவாதக் கருத்தியல் தீவிரமாக செல்வாக்குப் பெற்றிருந்தது என்ற வாதம் மாற்று இனத்தவர்களிடையே அதிகளவில் காணப்பட்டது. ஆனால், ஓர் இனம் தனது இனத்துவக் காரணிகளையும் இன தனித்துவத்தையும் முதன்மைப்படுத்தி அரசியலில் ஈடுபடுவதை இனவாதம் என்று கூறுவது எந்தளவுக்குப் பொருத்தமானது? என முஸ்லிம்கள் கேள்வியெழுப்பியதில் நியாயமிருந்தது. இன்னொரு இனத்தை துன்புறுத்தி அவர்களின் உரிமைகளை மறுத்து அரசியல் நடத்துவதையே இனவாதமாக அடையாளம் காண்பர். ஆனால், அஷ்ர∴ப் அவ்வாறு அரசியல் நடத்தியதாக அறுதியாகக் கூற முடியாது. அஷ்ர∴ப் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸை வழிநடாத்திய காலகட்டத்தில் முஸ்லிம்களின் உரிமைகள் மற்றும் நலன்கள் என்பவற்றோடு மற்றைய இனத்தவர்களையும் அரவணைத்தே முஸ்லிம் தனித்துவ அரசியலை முன்னெடுத்திருந்ததனை அவதானிக்கலாம். முஸ்லிம் காங்கிரஸ் உருவாகி அரசியலில் ஈடுபட்டத் தொடங்கிய காலத்திலிருந்தே தேர்தல்களில் மாற்று இனத்தவர்களையும் அஷ்ர∴ப் தனது கட்சி சார்பாகப் போட்டியிடச் செய்திருந்தார். இனங்களுக்கிடையே இணக்கப்பாட்டை கட்டியெழுப்பும் நேக்கில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் பல பெரும்பான்மையினக் கட்சிகளுடன் சிநேகபூர்வ கலந்துரையாடல்களை மேற்கொண்டு உடன்பாடுகளையும் எட்டியிருந்தார் (பார்க்க: சர்ஜூன், 2020; Yusoff et al., 2017). எல்லா இனத்தவர்களதும் நலனுக்காக அஷ்ர∴ப் தனது அமைச்சுக்கள் மூலமாக பல்வேறு சேவைகளை மேற்கொண்டிருந்ததனைப் பலரும் ஏற்றுக்கொண்டிருந்தனர். உண்மையில், இக்காலக்கட்டத்தில் முஸ்லிம் அரசியல் ஒரு பன்மைத்துவத்துவப் பார்வையைக் கொண்டிருந்தது என்பதே யதார்த்தமானது.

எவ்வாறிருப்பினும், தமிழர்களின் அரசியல் விடுதலைக்காகப் போராடிய தமிழ் ஈழ விடுதலைப் புலிகளும் சில சிங்கள அரசியல் தலைவர்களும் அஷ்ர∴பின் தனித்துவக் கட்சி அரசியலை தொடர்ந்தும் எதிர்த்தே வந்தனர். அஷ்ர∴ப் தனியான முஸ்லிம் அரசியல் கட்சியை ஆரம்பித்து நடைமுறை அரசியலில் தீவிரமாக ஈடுபடத் தொடங்கியதை அடுத்து அதுவரை மிதவாத தமிழ் அரசியல் தலைவர்கள் இலங்கை முஸ்லிம்கள் தொடர்பில் கொண்டிருந்த நோக்குகளுக்கெல்லாம் வேறுபட்ட வகையில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அமைப்பினர் முஸ்லிம்களின் இன, மத மற்றும் அரசியல் தனித்துவத்தை கேள்விக்குட்படுத்தும் வகையில் செயற்பட்டனர். முஸ்லிம்களுக்கு எதிராக பல்வேறுபட்ட எதிர்ப்புப் பிரச்சாரங்களையும் வன்முறைத் தாக்குதல்களையும் மேற்கொண்டனர். இவையெல்லாம் ''தமிழர்களின் அரசியலோ அல்லது விடுதலைப் போராட்டமோ தங்களைப் பாதுகாக்காது. ஆதலால், தாமே தமது இன மற்றும் அரசியல் தனித்துவத்துக்கான சக்தியை கட்டியெழுப்ப வேண்டும்'' என்ற கருத்தியல் வடக்கு-கிழக்கு முஸ்லிம்களிடத்தில் எழுச்சிபெறுவதைத் தூண்டுவனவாக அமைந்திருந்தன. உண்மையில், இன முரண்பாட்டினதும் இன ஒதுக்கல் அரசியலினதும் தாக்கத்தினால் விரக்தியின்

உச்சத்திலிருந்த முஸ்லிம் சமுதாயத்தை குறிப்பாக முஸ்லிம் இளைஞர்களை சரியான சந்தர்ப்பத்தில் ஜனநாயக அரசியல் பாதைக்கு எடுத்துச்சென்ற அஷ்ர.்.பின் அரசியற் செயற்பாடு மட்டும் அன்று நடந்திருந்திராவிட்டால் இலங்கையின் இன முரண்பாடு மேலும் தீவிர நிலையை எட்டியிருந்திருக்கும் என்பதும் அது இலங்கையின் இனங்களுக்கிடையேயான உறவில் மேலும் விரிசலை ஏற்படுத்தியிருந்திருக்கும் என்பதும் யதார்த்தமாகும்.

அஷ்ர.்.ப் தனித்துவ முஸ்லிம் கட்சி ஊடாக அரசியலில் ஈடுபட்ட காலகட்டத்தில் அரசியலில் பிரதேசவாதம் மற்றும் உயர்குழாம் ஆதிக்கம் என்பவற்றிக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு முயற்சித்தமையை முஸ்லிம் அரசியலில் மற்றொரு மாற்றமாகச் சுட்டிக் காட்டலாம். அரசின் பங்காளியான பின்பு எல்லாப் பிரதேசங்களிலும் எல்லா நிலையிலுமுள்ள மக்களது உயர்வுக்காகவும் முஸ்லிம் காங்கிரஸ் முயற்சித்தது. சாமான்ய மக்களும் அரசியலில் சமமாக ஈடுபடவும், மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தவும், அரசியல் சொல்லாடல்களில் தீவரமாகப் பங்குபெறவும் தேவையான சந்தர்ப்பங்களையும் வழிகளையும் முஸ்லிம் காங்கிரஸ் ஏற்படுத்திக் கொடுத்தது. உண்மையில், 1980 களுக்கு முன்பிருந்த முஸ்லிம் சமுதாய அரசியல் மற்றும் அபிவிருத்தி நிலைகளிலிருந்து 1990 களின் பின்னரான காலகட்டத்தில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டதனை எவரும் அவதானிக்க முடியும். இக்காலத்தில் முஸ்லிம் அரசியல் தலைமைத்துவம் ஜனரஞ்சகத் தலைத்துவமாக எழுச்சி பெற்றதும் மற்றொரு முக்கிய மாற்றமாகச் சுட்டிக்காட்ட முடியும். மரபு ரீதியான முஸ்லிம் அரசியலில் செல்வச் செழிப்பாலும் குடும்ப கௌரவத்தாலும் தலைவர்களுக்குக் கிடைத்துவந்த ஆதரவு என்பது தனித்துவ முஸ்லிம் கட்சி செல்வாக்குச் செலுத்தத் தொடங்கியதை அடுத்து வசீகர தலைமைத்துவப் பண்புகளாலும் ஆளுமையாலும் கிடைக்கப்பெறலானது.

### 3. அஷ்ர.்.புக்கு பின்னரான தனித்துவ முஸ்லிம் கட்சி அரசியலின் போக்குகள்

1994 பொதுத் தேர்தலை அடுத்து இலங்கை முஸ்லிம்களின் கட்சி அரசியல் புதிய வளர்ச்சி நிலையை அடையலானது. தேசிய அரசியலைத் தீர்மானிக்கும் சக்தியாக முஸ்லிம் அரசியலை அஷ்ர.்.ப் தனது தலைமைத்துவ ஆற்றல்கள் மற்றும் பேரம்பேசும் சக்தியினால் மாற்றியிருந்தார். அரசாங்கத்துடன் இணைந்து முஸ்லிம் சமுதாயத்தின் அபிவிருத்தி மற்றும் உரிமைகள் விடயத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீவிர கவனத்தை செலுத்தியிருந்தது. அத்தோடு, நாட்டின் இன முரண்பாட்டைத் தீர்ப்பதற்காகவும் தேசிய ஒருமைப்பாட்டைக் கட்டியெழுப்புவதற்காகவும் அக்கட்சி அயராது குரல் கொடுத்து வந்தது. ஆனாலும், முஸ்லிம் அரசியலுக்கு தனித்துவத்தையும் சிறந்த வழிகாட்டுதல்களையும் வழங்கிக்கொண்டிருந்த அஷ்ர.்.பின் திடீர் மறைவு (16.09.2000) முஸ்லிம் அரசியலுக்கு மட்டுமன்றி தேசிய அரசியலுக்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பாக மாறலானது.

இலங்கை முஸ்லிம் அரசியல் பெரும் திசைமாற்றத்தை அடைந்திருந்த முக்கிய தருணத்தில் அம்மாற்றதை வழிநாடத்திய அஷ்ர.்.பின் திடீர் மறைவு முஸ்லிம் அரசியலில் புதிய மாற்றங்கள் ஏற்படக் காரணமானது. முக்கியமாக, முஸ்லிம் அரசியலுக்கு மிகப்பெரும் தலைமைத்துவ வெற்றிடத்தை அது ஏற்படுத்தியது. அதுவரை அஷ்ர.்.ப் நாட்டிலுள்ள முழு முஸ்லிம் சமுதாயத்தினரதும் அரசியலுக்கு மிகச் சிறந்த தலைமைத்துவ வழிகாட்டுதல்களை வழங்கியிருந்தார். குறிப்பாக, முஸ்லிம் காங்கிரஸுக்கு அஷ்ர.்.பின் மரணத்தின் பின்பு நாட்டில் பல பகுதிகளிலும் வாழ்ந்த முஸ்லிம்கள் மட்டுமன்றி எல்லா இனத்தவர்களதும் ஆதரவு அதிகரித்திருந்தமையை அடுத்தடுத்து வந்த தேர்தல்கள் நிரூபித்திருந்தன.

எவ்வாறிருப்பினும், அஷ்ர.்.பின் மரணத்தின் பின்னர் அவரது அரசியல் சிந்தனையை பின்பற்றிய அவரது கட்சியைச் சேர்ந்தவர்களே முரண்படத் தொடங்கினர். தலைமைத்துவ வேட்கையால்

நேரடி மோதலிலேயே ஈடுபடலாயினர். இதனால், முஸ்லிம் தனித்துவ அரசியலை வழிநடாத்திய ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸில் இணைத் தலைமைத்துவம் எனும் புதிய மாற்றம் அல்லது போக்கு ஏற்படலானது. அதுவரை பெண்களின் தலைமைத்துவத்தை விரும்பியிராத அஷ்ரஃபின் வாரிசுகள் என்போர் ஒரு பெண்ணை – அஷ்ரஃபின் (விதவை) மனைவியை (அவர் தனது கணவருக்கான மதக் கடமையில் ஈடுபட்டிருந்த வேளையிலும்) அரசியலுக்குள் நுழைப்பதிலும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் இணைத் தலைவர்களில் ஒருவராக நியமிப்பதிலும் வெற்றிபெற்றனர் (Yusoff, Sarjoon & Zain, 2018; Fazil, 2016). இது முஸ்லிம் தனித்துவ அரசியலில் ஒரு புதிய போக்கை ஏற்படுத்தியது. ஆனால், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கான இணைத் தலைமைத்துவம் நீண்டகாலம் நிலைக்கவில்லை. தலைமைத்துவ அதிகாரத்துக்கான தீவிர போட்டியின் இறுதியில் முஸ்லிம் தனித்துவக் கட்சியானது நிரந்தரமாக இரண்டு அணிகளாக அல்லது குழுக்களாக (ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் தேசிய ஐக்கிய முன்னணி என) பிரிவதற்கு அது வழிவகுத்தது. இது முஸ்லிம் அரசியலுக்கு புதியவொரு திடீர் திருப்பத்தை ஏற்படுத்தியது. அஷ்ரஃப் செல்வாக்குமிக்க மக்கள் பிரதிநிதியாகவும் தலைவராகவும் இருந்தவரை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸிலினுள் நுழைந்து செல்வாக்குச் செலுத்த முடியாது எனக் கருதியிருந்தவர்களும் அஷ்ரஃபால் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களும் இந்த இரு அணிகளில் ஒன்றில் ஏதோ ஒரு வழியால் நுழைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. இதனால், முஸ்லிம் தனித்துவக் கட்சி அரசியலுக்கு அதுவரை பெருமை சேர்த்துக்கொண்டிருந்த ஒற்றுமை என்ற விடயம் படிப்படியாக சீர்குலையத் தொடங்கியது. அஷ்ரஃப் தனிக் கட்சி அரசியல் நடத்தியபோது அழுத்திக் கூறிய விடயங்களில் ‘‘ஒற்றுமை’’ எனும் விடயம் முக்கியமான ஒன்றாக இருந்தது. ஆனால், அவரின் சிந்தனைகளில் ஈர்க்கப்பட்டு அவற்றைப் பின்பற்றுவோராக தம்மை பெருமைபேசிக் கொண்டவர்களே அவற்றை புறக்கணிக்கலாயினர்.

அஷ்ரஃபுக்குப் பின்னரான ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் எற்பட்ட தொடர்ந்தேற்சியான தலைமைத்துவப் போட்டி நாளடைவில் அக்கட்சியிலிருந்து பலர் பிரிந்து செல்வதற்கும் பல புதிய முஸ்லிம் தனித்துவக் கட்சிகள் உருவாகுவதற்கும் காலாக அமைந்தது (பார்க்க: Fazil, 2016 & Busto, 2007). உண்மையில், அஷ்ரஃப் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸை முஸ்லிம்களுக்கான தனித்துவமான அரசியல் கட்சியாக பிரகடனம் செய்து ஆற்றிய பேருரையில் எந்தச் சூழ்நிலையிலும் இன்னுமொரு முஸ்லிம் அரசியல் கட்சியை தாபிக்க முனைய வேண்டாம் என அழுத்தமாகக் கூறியிருந்தமை நோக்கத்தக்கது (பார்க்க: அஷ்ரஃப், 1999). ஆனால், அஷ்ரஃப்பின் கட்டுக்கோப்பிலிருந்த அவரைப் பின்தொடர்ந்தவர்கள் அவரின் மறைவின் பின்னர் அவரது போதனையை கருத்தில் கொள்ளவில்லை. இதனால், அஷ்ரஃபுக்குப் பின்னரான காலத்தில் முஸ்லிம் அரசியலை பிரதிநிதித்துவம் செய்து ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து பிரிந்து சென்றவர்களால் தோற்றுவிக்கப்பட்ட சுமார் அரை டஜன் அளவு முஸ்லிம் அரசியல் கட்சிகள் தோற்றம் பெற்றுள்ளன. அவற்றில் சில தேர்தல் அரசியலில் செல்வாக்குமிக்கனவாகவும் உள்ளன. எனினும், அம்முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் எதிரும் புதிருமான இரு வேறு கொள்கைகளைக் கொண்டோரிடம்டன் இணைந்து அரசியலில் ஈடுபடுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது. உண்மையில், அஷ்ரஃப் தனக்குப் பின்னரான அடுத்த தலைமைத்துவத்தை தனது கட்சிக்குள் வளர்த்துவிட்டுச் செல்லவில்லை என்ற யதார்த்தமும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் உடைவுக்குப் பெரிதும் பங்களிப்புச் செய்துள்ள பலமான காரணி என்பது குறிப்பிடத்தக்கது (பார்க்க: Yusoff et al., 2018).

அஷ்ரஃப் முஸ்லிம் தனிக் கட்சி அரசியலின் பலத்தினை அதிகப்படுத்திவிட்டுச் சென்றிருந்தாலும் அஷ்ரஃபின் பின்னரான காலகட்டத்தில் முஸ்லிம் கட்சிகளின் பேரம்பேசும் சக்தி வலுவிழந்தே உள்ளது. மாறாக, சந்தர்ப்பவாத மற்றும் சலுகை அரசியலுக்குள் முஸ்லிம் அரசியல் கட்சிகள் நுழைந்து விட்டதை கடந்தகால அரசியல் நிகழ்வுகள் எமக்கு சுட்டிக் காட்டுகின்றன. கடந்த

காலத்தில் குறிப்பாக போருக்குப் பின்னரான காலத்தில் தேசிய அளவிலும் பிராந்திய அளவிலும் தாக்கத்தை ஏற்படுத்திய பல்வேறு அரசியல் தீர்மானங்கள் எடுக்கப்படுவதற்கு முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களும் அக்கட்சிகளின் பாராளுமன்ற மற்றும் மாகாண சபைகளின் பிரதிநிதிகளும் காரணகர்த்தாக்களாக இருந்துள்ளபோதிலும் அப்போதெல்லாம் அவர்கள் பெரும்பான்மையின அரசியல் கட்சிகளதும் தலைவர்களதும் நலன்களைப் பூர்த்தி செய்யும் கைம்பொம்மைகளாகவே செயற்பட்டிருந்தனர். மாறாக, அத்தீர்மானம் எடுத்தல் செயன்முறையில் முஸ்லிம்களின் நலன்களையும் நீண்டகாலக் கோரிக்கைகளையும் முறையாக உள்ளீர்ப்புச் செய்வதில் முஸ்லிம் கட்சித் தலைவர்கள் வினைத்திறனுடன் செயற்பட்டிருக்கவில்லை என்பதே யதார்த்தமாகும்.

முஸ்லிம்களின் தனித்துவ இன-மத அடையாளத்தை முன்னிலைப்படுத்தி அரசியல் நடத்திய மறைந்த எம்.எச்.எம்.அஷ்ரஃப் முஸ்லிம்களின் உரிமைகள், நலன்கள் மற்றும் எதிர்பார்க்கைகள் விடயத்தில் எப்போதும் அக்கறை காட்டிய வண்ணமே செயற்பட்டிருந்தார். ஆனால், அஷ்ரஃப்புக்குப் பின்னரான காலத்தில் முஸ்லிம் தனித்துவ அரசியலில் ஏற்பட்டுள்ள பிளவுகளைக் காரணம் காட்டி முஸ்லிம் அரசியல் தலைவர்களை பேரினவாத அரசியல் தலைவர்கள் பயன்படுத்திக் கொண்டிருப்பது தொடர் கதையாகவே நடந்தேறுகின்றது. கடந்த காலங்களில் இனப் பிரச்சினைத் தீர்வு விடயத்திலும் அரசியல் இலாபங்களுக்காகவும் முஸ்லிம் தலைவர்களும் முஸ்லிம் பாராளுமன்றப் பிரதிநிதிகளும் எவ்வாறு கையாளப்பட்டார்கள் என்பது இதனை தெளிவாக வெளிப்படுத்துகின்றது.

### *2019 உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலும் தனித்துவ முஸ்லிம் அரசியல் கட்சிகளின் போக்கும்*

உள்நாட்டுப் போரின் முடிவின் பின்னரான இலங்கையில் 2019 ஏப்ரலில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் பல்வேறு வழிகளில் பெரும் தாக்கங்களைச் செலுத்தியுள்ளது. குறிப்பாக, முஸ்லிம் பெயர் தாங்கிய ஆயுததாரிகளால் அக்குண்டுவெடிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டதனால் இலங்கை முஸ்லிம்கள் ''பயங்கரவாதிகள்'' என்ற பொதுவான முத்திரை குத்தப்படுவதற்கு அந்நிகழ்வுகள் காலாக அமைந்ததுடன் முஸ்லிம்களின் மத, கலாசார தனித்துவ அடையாளத்தைப் பேணுவதும் பெருமளவுக்கு சவால்மிக்கதாக மாறியுள்ளது. அவ்வாறே, குண்டுத் தாக்குதல்களுக்குப் பின்னரான சம்பவங்களும் அரசியற் செயற்பாடுகளும் அரசியல் ரீதியில் முஸ்லிம்களும் முஸ்லிம் கட்சிகளும் தனிமைப்படுத்தப்படுவதற்கும் காலாக அமைந்திருந்தன. இந்த நிலையானது முஸ்லிம்கள் தமது தனித்துவக் கட்சி அரசியலை சீர்தூக்கிப் பார்க்க வேண்டிய அல்லது மறுசீரமைப்புச் செய்ய வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது என்பது யதார்த்தமாகும்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களுக்குப் பின்னரான காலத்தில் முஸ்லிம் கட்சிகளும் அரசியல் தலைவர்களும் தங்களுக்கிடையேயிருந்த கொள்கை ரீதியான வேறுபாடுகளை மறந்து ஒற்றுமையை பல சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தியிருந்தனர். அவ்வாறே, தாமோ அல்லது தமது சமுதாயமோ பயங்கரவாதத்துக்குத் துணை போனவர்கள் அல்ல என்பதையும் பறைசாற்றி நின்றனர் (Srinivasan, 2019). ஆனாலும், முஸ்லிம் அரசியல் தலைவர்களின் ஒற்றுமையின் தூய்மையான நோக்கம் குறித்தும் அவர்களது கடந்த கால அரசியல் செயற்பாடுகள் குறித்தும் பல்வேறு விமர்சனங்கள் முஸ்லிம் சமுதாயத்திலிருந்தும் வெளியிலிருந்தும் வெளிவந்தவண்ணமே இருந்தன.

அஷ்ரஃபுக்குப் பின்னரான காலகட்டத்தை நோக்கின் எந்தவொரு முஸ்லிம் அரசியல் கட்சியும் அல்லது அதன் தலைவரும் நிலையான அரசியற் கொள்கையில் இருந்திருக்கவில்லை. தொடர்ந்தும் மாறிமாறி மத்தியில் ஆட்சிக்கு வரும் கட்சிகளில் சங்கமித்து அரசியல் ரீதியில் தமது உத்தம குருவாக முன்னிலைப்படுத்துகின்ற அஷ்ரஃபின் கொள்கைகளுக்கு மாற்றமான செயற்பாடுகளிலேயே அவர்கள் அதிகளவில் ஈடுபட்டு வந்துள்ளனர். சிங்களத் தலைமைகளுடன் தேசிய மற்றும் மாகாண மட்ட அரசாங்கங்களில் இணைந்து அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்த முஸ்லிம் கட்சிகளின் தலைமைகள் முஸ்லிம் சமுதாயத்தினரின் அடிப்படை உரிமைகள் மற்றும் அவர்கள் எதிர்நோக்கிய பல்வேறுபட்ட முக்கியமான பிரச்சினைகளைத் தீர்ப்பதில் முனைப்போடு செயற்பட்டிருக்கவில்லை. அத்துடன், முஸ்லிம்கள் மத்தியில் எழுச்சி பெற்றிருந்த மத ரீதியிலான பிளவுகள் மற்றும் அடையாள ரீதியிலான தீவிர மாற்றங்களை அவதானிக்கவோ அவற்றின் பாதகமான தாக்கங்களை முன்கூட்டிக் கணித்து எச்சரிக்கை செய்வதையோ தங்களது தலைமைத்துவக் கடமையாக அக்கட்சித் தலைவர்கள் கருதியிருக்கவில்லை. தமது கட்சிகளை மென்மேலும் இனத்துவ ரீதியில் கூர்மைப்படுத்துவதை திறன்படச் செய்திருந்த அத்தலைவர்கள் பல்லின சமூகச் சூழலில் தமது சமுதாயத்தை இனத்துவ மற்றும் மதத்துவ ரீதியில் பெரும்பான்மையினருடன் அல்லது முழுத் தேசத்துடன் ஒருங்கிணைப்புச் செய்ய தவறிவிட்டனர்.

குறிப்பாக, முஸ்லிம் சமுதாயத்தினுள் எழுச்சி பெற்றிருந்த சில தீவிரவாதப் போக்குடைய குழுக்களின் செயற்பாடுகள் தொடர்பில் – அவை குறித்த எதிர்ப்புக்களும் விமர்சனங்களும் வெளிப்படையாகவே அதிகரித்திருந்த நிலையிலும் கூட – அவ்விவகாரங்கள் தொடர்பில் முஸ்லிம் அரசியல் தலைவர்களது கவனம் திரும்பியிருக்கவில்லை. இதன் விளைவாகவே உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களுக்கு முஸ்லிம்-பெயர்தாங்கிய ஆயுதக் குழுவினர் துணைபோனதும் இதன் பின்பு முஸ்லிம்கள் "பயங்கரவாதிகள்" என முத்திரை குத்தப்பட்டதும் இலகுவாக நடந்தேறின. இதனால், இன்று முஸ்லிம்களின் தனித்துவ கட்சி அரசியல் மட்டுமல்லாது முழு முஸ்லிம் சமுதாயமும் தேசிய அளவிலான பெருமளவு விமர்சனங்களையும் எதிர்ப்புக்களையும் சந்திக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது. உண்மையில், இலங்கையின் நீண்டகால வரலாற்றை எடுத்து நோக்கின் முஸ்லிம்கள் எந்த வடிவிலான வன்முறைக்கும் பயங்கரவாதச் செயற்பாடுகளுக்கும் தொடர்ந்தும் தமது எதிர்ப்பைத் தெரிவிப்போராகவும் அரசியல்-சமூக ரீதியில் நடுநிலைக் கொள்கையைக் கொண்டு ஆட்சியாளர்களுக்கு எப்போதும் ஆதரவு தெரிவிப்போராகவும் இருந்துவந்துள்ளமை நோக்கத்தக்கது (பார்க்க: சர்ஜூன், 2019).

அஷ்ரஃப் தீவிர அரசியலில் ஈடுபட்டபோது அவருக்கு இனத்துவ அரசியலில் மட்டுமன்றி தேசிய ரீதியான கட்சி அரசியலை முன்னெடுக்கும் நோக்கமும் விருப்பமும் இருந்தது வெளிப்படையானதே. ஆனால், அஷ்ரஃபின் மறைவுக்குப் பின்னரான குறிப்பாக, உள்நாட்டுப் போருக்குப் பின்னரான அரசியற் சூழமைவில் – இன மற்றும் மத மேலாதிக்க மனோபாவமும் நடத்தையும் மேலோங்கியிருக்கும் சமூக-அரசியல் சூழமைவில் – முஸ்லிம் தலைவர்கள் இனத்துவ அரசியலை கூர்மைப்படுத்திக் கொண்டோ அல்லது தேசிய அளவில் தமது கட்சிச் செயற்பாடுகளை முன்னெடுத்து எல்லா இன மக்களுக்கும் தலைமைதாங்கவோ முனைவது பல்வேறு எதிர் விளைவுகளையே ஏற்படுத்தும். எனவே, தமது கட்சி அரசியலை சீரமைத்து இனத்துவக் கோரிக்கைகளை மாத்திரம் முன்னிலைப்படுத்தாது தேசியக் கட்சிகளுடன் இணைந்த வகையில் தேசிய நலன், தேசிய ஐக்கியம் மற்றும் தேசத்தின் கௌரவத்தை பாதிக்காத வகையில் தமது கட்சிகளின் அரசியலைக் கொண்டுசெல்வதே தனித்துவ முஸ்லிம் கட்சி அரசியலைக் கொண்டு நடாத்துபவர்களுக்கு முன்னாலுள்ள தெரிவாகவும் தேவையாகவும் உள்ளது. எனினும், இது மிகவும் நுட்பமாக கையாளப்பட வேண்டிய விடயமாகும்.

உட்கட்சிப் பூசல்களாலும், தலைமைத்துவ நெருக்கடிகளாலும், பிராந்தியவாதச் சிந்தனைகளாலும் சீர்குலைந்து அரசியல் பலத்தை இழந்து நிற்கின்ற இலங்கை முஸ்லிம்களின் கட்சி அரசியலைச் சீர்படுத்துவதற்கு அடிப்படையில் ஒரு விடயம் நடந்தேறுவது அவசியமாகின்றது. அதுதான் முஸ்லிம்களதும் முஸ்லிம் அரசியல் தலைவர்களதும் ஒற்றுமையாகும். முதலில் தலைவர்கள் ஒன்றுபட்டால் முஸ்லிம் சமுதாயத்தை ஒன்றுபடுத்துவது சாத்தியமாக அமையலாம். ஒன்றுபடுவதால் மட்டுமே முஸ்லிம் சமுதாயத்துக்கும் அவர்களின் அரசியலுக்கும் பலமும் விமோசனமும் உண்டு என்பதை தனித்துவ முஸ்லிம் அரசியல் கட்சியை உருவாக்கி அரசியலில் ஈடுபட்டதன் ஊடாக அஷ்ர.்.ப் நிரூபித்துக் காட்டியுள்ளார். 2019 உயிர்த்த ஞாயிறு வன்முறைத் தாக்குதல்களுக்குப் பின்னரான காலகட்டத்தில் முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு எதிராக எழுச்சி பெற்ற பெரும்பான்மையினத் தேசியவாத மேலாதிக்கச் சூழலின்போது முஸ்லிம் தலைவர்கள் ஒன்றுபட்டுச் செயற்பட்டு முஸ்லிம்களுக்கு எதிராக நடந்தேறவிருந்த அழிவிலிருந்து அப்போது காப்பாற்றியிருந்தனர். ஆனால், அப்போது முஸ்லிம் தலைவர்களிடத்தில் ஏற்பட்ட ஒற்றுமை தொடர்ந்திருக்கவில்லை. குறிப்பாக, கடந்த 2020 பொதுத் தேர்தல் காலத்தில் முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் தங்களது அரசியல் இலாபங்களுக்காக எதிரெதிராக அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்து பின்னர் பல்வேறு சவால்களை எதிர்கொண்டமையானது ஒற்றுமையின் மூலமே முஸ்லிம் அரசியல் தலைமைகள் தமது அரசியல் இயக்கத்தையும் அதன் சக்தியையும் பலப்படுத்த முடியும் என்பதை பறைசாட்டி நிற்கின்றன.

முஸ்லிம் சமுதாயத்தினதும் தேசிய நலன்களையும் முன்னிலைப்படுத்தி முஸ்லிம் அரசியல் தலைவர்களிடையே நிலையான ஒற்றுமை கட்டியெழுப்பப்படுமாயின் அரசியல் ரீதியில் முஸ்லிம்களின் தனித்துவத்தை எதிர்காலத்திலும் நிலைநாட்ட முடியும். இன்று முஸ்லிம் அரசியலில் அஷ்ர.்.ப் இல்லாவிட்டலும் அவர் விட்டுச் சென்ற அரசியல் புகழிலும் சக்தியிலுமே தனித்துவ முஸ்லிம் அரசியல் கட்சிகளெல்லாம் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பது வெளிப்படையானது. ஆதலால், முஸ்லிம் சமுதாயத்தினதும் அரசியலினதும் கௌரவத்தைப் பேணுவதற்கு கருத்து வேற்றுமைகளை மறந்து அரசியல் தலைவர்கள் ஒன்றுபடுவதே அவசியமாகின்றது. அஷ்ர.்.பின் மறைவின் பின்னரான பல தேர்தல்களும் சம்பவங்களும் இந்த யதார்த்தத்தையே பாடம் புகட்டி நிற்கின்றன.

### 4. முடிவுக் குறிப்புக்கள்

பன்மைத்துவ சமூகக் கட்டமைப்பைக் கொண்ட இலங்கையில் முஸ்லிம்கள் நீண்டகால வரலாற்றைக் கொண்டவர்கள். இலங்கை முஸ்லிம்களது பூர்வீகமும் இனத்துவ தனித்துவமும் உறுதிப்படுத்தப்பட்டவைகள். தமது மதத்தையே இனத்துவ அடையாளமாக முன்னிலைப்படுத்தும் முஸ்லிம்கள் சுதேசிய ஆட்சியாளர்களிடையே நன்மதிப்புப் பெற்றிருந்ததுடன் இன முரண்பாடு தோற்றம்பெற்று தீவிரமடையும் வரையில் பெரும்பான்மை இனக் குழுக்களுடன் இணைந்து அரசியலில் ஈடுபட்டு வந்துள்ளனர். மாறாக, அவர்கள் தங்களுக்கென்று ஓர் இனத்துவக் கட்சியை உருவாக்கிச் அரசியலில் ஈடுபடுதவற்கு தீவிரமாக முயற்சிக்கவில்லை. அதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகளும் தோல்வியையே அடைந்தன. இன முரண்பாட்டின் அகோர விளைவுகளானது வடக்கு-கிழக்கு முஸ்லிம்களின் இருப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியபோது அவர்களிடையே தனித்துவ அரசியல் கட்சி எனும் சிந்தனை எழுச்சிபெறத் தொடங்கியது. அதன் விளைவாகவே 1986 இல் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் எனும் தனித்துவ முஸ்லிம் கட்சி உதயமானது. கடந்த நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் ஒரு தசாப்தத்துக்கும் மேலாக இலங்கையின் தேசிய அரசியலில் முஸ்லிம்களின் தனித்துவக் கட்சி – அதாவது ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் குறிப்பிடத்தக்களவு செல்வாக்கைச் செலுத்தியது. அதன் நிறுவனர் எம்.எச்.எம்.அஷ்ர.்.ப் முஸ்லிம் அரசியலிலும் தேசிய அரசியலிலும் செல்வாக்குமிக்க தலைவராக எழுச்சி பெற்றிருந்தார்.

எனினும், எதிர்பாராத வேளையில் இடம்பெற்ற அஷ்ர.்.பின் திடீர் மறைவின் பின்னரான காலத்தில் இலங்கை முஸ்லிம்களின் கட்சி அரசியல் பல்வேறு புதிய மாற்றங்களையும் பரிமானங்களையும் பெற்றுள்ளதோடு பல்வேறு சவால்களையும் எதிர்நோக்கியுள்ளது. அதன் விளைவாக பல புதிய முஸ்லிம் அரசியல் கட்சிகள் தோற்றம் பெற்று தேசிய அரசியலில் சங்கமித்துள்ளன. அவற்றில் சில தேசிய அளவில் செல்வாக்கு மிக்கனவாகவும் சில பெயரளவிலும் உள்ளன. இன்றுவரை அதிகளவிலான இலங்கை முஸ்லிம்களிடையே தனித்துவ கட்சி அரசியல் சிந்தனையே உள்ளபோதும் முஸ்லிம் தனித்துவ அரசியல் கட்சிகளுக்கு இடையேயான முரண்பாடுகள் முஸ்லிம் கட்சி அரசியலின் பலத்தை அதிகரிப்பதற்கு பெரும் சவாலாக உள்ளன. உள்நாட்டுப் போரின் முடிவின் பின்னரான பெரும்பான்மையின-மத மேலாதிக்க அரசியல் சூழமைவில் பெரும்பான்மையினத்தவர்களின் நலன்களைப் பாதிக்காது முஸ்லிம்களின் கட்சி அரசியலைக் கொண்டுநடாத்துவது மற்றொரு சவாலாக உள்ளது. இச்சவால்களை எதிர்கொள்வதற்கு முஸ்லிம் அரசியல் கட்சித் தலைமைகள் ஒன்றிணைவதும் தேசிய நலன்களை முன்னிலைப்படுத்திய வகையில் முஸ்லிம் கட்சி அரசியலின் கருத்தியலும் நோக்குகளும் மீள் ஒழுங்குபடுத்தலுக்கு உட்படுவதும் மிகவும் அவசியமாகின்றது.

முஸ்லிம் சமுதாயத்தினரின் வரலாறும் தேசத்துக்கான அவர்களின் பங்களிப்புக்களும் கேட்விக்குட்டுத்தப்பட்டு, கொச்சைப்படுத்தப்பட்டு, முஸ்லிம்களின் மத மற்றும் கலாசார தனித்துவத்துக்கு எதிரான வெறுப்புணர்வும் வன்முறைத் தாக்குதல்களும் அதிகரித்துள்ள சமகால சூழமைவில் முஸ்லிம் அரசியல் கட்சிகளும் தலைமைகளும் தொடர்ந்தும் இனவாத அரசியல் செயற்பாடுகளை கூர்மைப்படுத்த முனைவது இலங்கை முஸ்லிம்களையும் அவர்களது கட்சி அரசியலையும் ஆபத்தான நிலைக்கே இட்டுச் செல்லும். முஸ்லிம் அரசியல் கட்சிகளின் தூரநோக்குகளும் அவற்றை அமுல்படுத்துவதற்கான செயற்பாடுகளும் மீள் பரிசீலனைக்கு உட்படுத்தப்படுவதிலேயே இலங்கைத் தேசத்தில் முஸ்லிம்களின் இருப்பும், அடையாளமும், தனிக் கட்சி அரசியலின் செல்வாக்கும் அதிகளவில் தங்கியுள்ளது.

**உசாத்துணைகள்:**


அமீன், எம்.ஐ.எம். (2000). *இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் கலாசாரமும் (1870-1915).* ஹெம்மாத்தகம: அல்ஹசனாத் பதிப்பகம்.

அஷ்ர.்.ப், எம்.எச்.எம். (1999). *முஸ்லிம் காங்கிரஸ் தேசிய மாநாட்டுப் பேருரைகள்.* கொழும்பு: தாருஸ்ஸலாம் வெளியீட்டகம்.

அரசாங்க அச்சுத் திணைக்களம். (1990). *1988 இல் நடத்தப்பட்ட இலங்கையின் முதலாவது மாகாண சபைகளுக்கான வாக்கெடுப்புகள் பற்றிய தேர்தல் ஆணையாளரின் அறிக்கை.* கொழும்பு: இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களம்.

சர்ஜூன், ஆ. (2017). இலங்கை முஸ்லிம்களின் பூர்வீகமும் இன தனித்துவமும்: ஒரு வரலாற்று மீள் நோக்கு. *நவீன தமிழாய்வு,* 5(2), 203-213.

சர்ஜூன், ஆ. (2019). இலங்கையில் தேசிய ஒருமைப்பாட்டையும் சமூக இணக்கத்தையும் பேணுவதில் முஸ்லிம்கள்: சுதேசிய மன்னராட்சிக் காலம் முதல் சிவில் யுத்தத்துக்குப் பின்னரான காலம் வரை. *Sri Lanka Journal of Arabic and Islamic Studies,* 2(2), 63-73.

சர்ஜூன், ஆ. (2020). *இலங்கை முஸ்லிம் அரசியலில் எம்.எச்.எம்.அஷ்ர.்.பின் தலைமைத்துவம்.* கொழும்பு. குமரன் புத்தக இல்லம்.

தேர்தல்கள் செயலகம். (1991). *இலங்கையின் ஒன்பதாவது பாராளுமன்றப் பொதுத்தேர்தல் பற்றிய தேர்தல் ஆணையாளரின் அறிக்கை.* கொழும்பு: தேர்தல்கள் செயலகம்.

Ali, A. (2014). Muslims in harmony and conflict in plural Sri Lanka: A historical summary from a religio-economic and political perspectives. *Journal of Muslim Minority Affairs,* 34(3), 227-242.

Busto, M. (2007). The politics of a second largest minority in Sri Lanka. Unpublished Master Thesis, University of Oslo, Oslo.

Department of Census and Statistics. 2015. *Census of population and housing 2012 - Final report*. Colombo: Department of Census and Statistics.

Fazil, M.M. (2016). Fragmentation of Muslim politics in Sri Lanka: A critical analysis of Sri Lanka Muslim Congress (SLMC). Conference Paper. *International Conference on Social Sciences and Humanities (ICOSH09)*. Bangi: National University of Malaysia.

Goonerathne, W.G & Karunaratne, R.S. (1996). *Tenth parliament.* Colombo: Associated News Papers of Ceylon Ltd.

Imtiyaz, A.R.M & Hoole, S.R.H. (2011). Some critical notes on the non-Tamil idenitity of the Muslims of Sri Lanka, and on Tamil-Muslim relations. *South Asia: Journal of South Asian Studies*, 34(2), 208-231.

Jeyasundara-Sumith, S. (2011). Conflict, war and peace in Sri Lanka – politics by other means. Confernce Paper. *Rethinking Development in an Age of Scarsity and Uncertainity: New Volues, Voices and Alliance for Increased Reliance.* (19-22) September. University of York.

Keethaponcalan, S.I. (2008). *Sri Lanka: Politics of power, crisis and peace 2000-2005*. New Delhi: Kumaran Book House.

McGilvray, D & Raheem, M. (2007). *Muslim perspectives on the Sri Lankan conflict*. Washington DC: East-West Center.

Phadnis, U. (1979). Political profile of the Muslim minority of Sri Lanka. *International Studies*, 18(1), 27-48.

Srinivasan, M. 2019. Nine Muslim ministers and two governors step down in Sri Lanka. The Hindu. 03 June. Online: https://www.thehindu.com/news/international/nine-muslim-ministers-and-two-governors-step-down-in-sri-lanka/article27412798.ece (10.10.2021).

Vamadevan, V. (1999). *The story of the Sri Lankan Muslims.* Sydney: Author's Publication.

Warnapala, W.A.W. (2004). *Electoral politics in Sri Lanka: A study of the parliamentary general Election of December, 2001*. Colombo: Godage International Publishers.

Warnapala, Y & Yehiya, Z.B. (2005). Minority electoral politics: A Sri Lankan case study. *Journal of Asian and African Studies*, 40(6), 439-4462.

Yusoff, M.A., Hussin, N & Sarjoon, A. (2014a). Positioning Muslims in ethnic relations, ethnic conflict and peace process in Sri Lanka. *Asian Social Science*, 10(10), 199-211.

Yusoff, M.A., Hussin, N & Sarjoon, A. (2014b). Muslim demand for territorial autonomy in the Eastern Sri Lanka: An analysis of its origin, accommodation and the present stance. *Asian Social Science*, 10(15), 76-88.

Yusoff, M.A., Sarjoon, A., Hussin, N & Ahmed, A. (2017). Analyzing the contributions of Sri Lanka Muslim Congress and its founder-leader to Muslim politics and community in Sri Lanka. *Social Sciences.* 6, 120.

Yusoff, M.A., Sarjoon, A & Zain, Z.M. (2018). Analyzing the fragmented Sri Lankan Muslim politics in post-Ashraff era. *Journal of Politics and Law*, 11(3), 17-32.

Yusoff, M.A., Sarjoon, A., Hussin, N & Mohammad Ghazali, Z.A. (2016). Ethnicity, minority and group consciousness: An examination of ethnic group formation of Sri Lankan Muslims through conceptual analysis. *The Social Sciences*, 11(7), 1322-1330.